# துன் சம்பந்தன் வியாபார தளத்தில் சம்பந்தமே இல்லாத ஒருவருக்கு கடை வழங்கப்பட்டது எப்படி?

(ஆர்.குணா)

கோலாலம்பூர், பிப்.5- இந்தியர்களின் பாரம்பரிய வர்த்தக தளமான பிரிக்பீல்ட்ஸ் லிட்டில் இந்தியாவிலுள்ள துன் சம்பந்தன் வியாபார தளத்தில் சம்பந்தமே இல்லாத ஒருவருக்கு எப்படி மாநகர் மன்றம் கடையை கொடுக்க முடியும் என அங்குள்ள வியாபாரிகள் தங்களின் மனக்குமுறலை வெளிப்படுத்தினர்.

பல ஆண்டுகளாக வியாபாரம் செய்து வரும் எங்களுக்குரிய கடைகளை எங்களுக்கே கொடுக்காமல் மற்றவர்களுக்கு கொடுப்பட்டது ஏன்? இங்கு பல ஆண்டுகளாக நாங்கள் வியாபாரம் செய்து வருகிறோம். எனக்கு கீழ்த்தளத்தில் 4 எண் கொண்ட கடை வழங்கப்பட்டது.






ஆனால் அந்த கடையில் வியாபாரம் செய்ய எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை. என் கடைக்காக பத்து ஆண்டுகள் போராடி வருகிறேன். பலமுறை மாநகர் மன்ற அதிகாரிகளை சந்தித்து முறையிட்டுள்ளேன். ஆனால் இதுநாள் வரை எனக்கு கீழ்த்தளத்தில் 4 எண் கொண்ட கடை வழங்கப் படவில்லை என்று உணவகத்தின் உரிமை யாளர் சுமதி தெரிவித்தார்.

கோவிட் -19 காலகட்டத்தில் என்னால் வியாபாரம் செய்ய முடியாமல் போனது. மேலும் என் கணவர் மாற்றுத் திறனாளி ஆவார். இப்போது மீண்டும் வியாபாரம் செய்ய வந்திருக்கிறேன். ஆனால் என் கடையை மற்றொரு வருக்கு கொடுத்து விட்டார்கள் என்று கலைச்செல்வி வேலு தெரிவித்தார். ஆகவே மாநகர் மன்றம் இந்த விவகாரத்தில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று நீண்ட காலமாக வியாபாரம் செய்து வரும் புவான் நூருல் தெரிவித்தார்.